மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், மயிலாடுதுறை, மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், சீர்காழி மாவட்ட உரிமை இயல் நீதிமன்றம், நன்னிலம்.

குற்றவியல் நீதிமன்றங்கள் :

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1, நாகப்பட்டினம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2, நாகப்பட்டினம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருவாரூர், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 1, மயிலாடுதுறை, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2, மயிலாடுதுறை, குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சீர்காழி.

மாண்புமிகு உறுப்பினர் கேட்டது போல, கட்டிடங்கள் கட்டுகின்ற முக்கியப் பிரச்சினை, நிதிநிலையை அனுசரித்து, போதிய கட்டிடம் கட்டப்படும்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பது குறித்து, அந்த மாவட்டத்திலுள்ள சிவகாசி, சாத்தூர், ஆகிய பகுதிகளிலுள்ள வழக்கறிஞர்கள் எல்லாம் கடந்த 2 மாதமாக நீதிமன்றத்திற்குச் செல்லாமல் புறக்கணித்து, தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பில்லை ; தனியாக கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

ஆக்கிரமிப்பை அகற்றுதல்.

*3664 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடியில் வைகை ஆற்றின் ஓரத்தில் உள்ள புறம்போக்கு ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

1990 ஏப்ரல் 26]

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பகுதியிலும் எமனேஸ்வரம் பகுதியிலும் வைகை ஆற்றுப் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்தது. அந்த ஆக்கிரமிப்புகளை உடன் அகற்ற அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றின் இரு பகுதிகளின் ஓரங்களிலும் ஒரு சில அதிகார வர்க்கத்தினர், ஒரு சில அரசியல் வாதிகள், செல்வாக்குள்ளவர்கள், முதலில் வேலிகளை அமைத்து பின்பு வீடுகளைக் கட்டி வருகிறார்கள். இங்கு குடியிருப்பவர்கள் சாராயம் காய்ச்சி, சட்ட விரோதமாக விற்பனை செய்து வருகிறார்கள். சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறார்கள். குறிப்பாக, மகளிருக்கென கட்டப்பட்ட — ஆற்றின் ஓரத்தில் கட்டப்பட்டுள்ள கழிப்பறைகளின் அருகிலே குடிசைகளைப் போட்டு, ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். ஆற்றின் ஓரத்தில் இருக்கக்கூடிய வீட்டின் சொந்தக்காரர்கள் 70 விருந்து 100 அடி வரைக்கும் கரைகளை ஆக்கிரமித்து, பின்னர் வீடுகளை 'எக்ஸ்டென்ட்' செய்து கொண்டிருக்கிறார்கள். அரசின் கவனத்திற்கு, பலமுறை கொண்டு வந்தும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரசு, துரித நடவடிக்கை எடுக்காவிட்டால், ஆற்றின் நடுவிலே கூட குடிசைகளை அமைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

9-20 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யூகத்துக்கு எல்லாம் இங்கு இடம் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, பரமக்குடி வட்டம், பரமக்குடி டவுன், காடு பரமக்குடி வைகையாற்று புறம்போக்கில் மொத்தம் 124 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். மேற்படி 124 நபர்களில் 8 நபர்கள் ஓடு வீடு கட்டியும், ஒரு நபர் காரை வீடு கட்டியும், மீதம் 115 நபர்கள் கூரை வீடுகள் கட்டியும் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். மேலும் வைகையாற்றுப் புறம்போக்கிலேயே எமனேஸ்வரம் பகுதியில் 37 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். மேற்படி 37 நபர்களில் 3 நபர்கள் கூரை வீடு கட்டியும், 2 நபர்கள் தென்னை வைத்தும், 2 நபர்கள் கிணறு வெட்டியும். மீதம் 30 நபர்கள் வேலி அடைத்தும் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். மேற்சொன்ன ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் விரைவில் காலி செய்ய பரமக்குடி வட்டாட்சியரால் நடவடிக்கை

[1990 ஏப்ரல் 26

எடுக்கப்பட்டு வருகிறது. அங்கு கள்ளச்சாராயம் காய்ச்சுகிற விவரம் எனக்குதெரியாது. நேரடியாக எனக்கு தகவல் வந்தால் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சிக்கும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பரமக்குடி அருகில் வைகையாற்றிலிருந்து வரும் தேன்தோனி கால்வாய் இப்போது தூர்ந்து இருக்கிறது. கால்வாய் புறம் போக்கு ஆக்கிரமிப்பு என்று தெரிந்தும் கூட கழிவுநீர் சென்று கொண்டு இருந்த அந்தக் கால்வாயை ஆக்கிரமிப்புச் செய்து வீடுகள் கட்டியதன் மூலம் கழிவுநீர் செல்லாமல் நகரின் மத்தியில் ரோடுகளில் சாக்கடை ஓடிக்கொண்டிருக்கிற சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆகவே அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அந்தக் கழிவுநீர் செல்வதற்குக் கால்வாயை சீரமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: இது மாண்புமிகு உறுப்பினரின் விளக்க உரை. தகுந்த உரை, மேற்சொன்ன ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் விரைவில் காலி செய்ய பரமக்குடி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுந்தரம், மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக துணை வினா இருக்க வேண்டும்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் இருக்கின்ற வைகையாற்று புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவது மட்டும் அல்லாமல் வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற பாலாற்று புறம்போக்கில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திடீரென்று கேட்டால் அமைச்சரிடம் பதில் இருக்குமா? (குறுக்கீடு) சரி கேளுங்கள்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வீடுகளைக் கட்டிக்கொண்டு, இருப்பதால் மழைக் காலங்களில் அது அடித்துக்கொண்டு செல்லப்படுகிறது, அதற்கு உடனடியாக நிவாரணம் தேவை என்று கூட அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் கோருகிறார்கள். அதைத் தடுத்து உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : திருப்தியாகத் தெரிவிக்கிறேன், அரசு நடவடிக்கை எடுக்கும்.

1990 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 8359 எதிர்பாராத விபத்துகளில் மரணம் அடையும் மாட்டு வண்டித் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை பற்றிய கேள்வி....விடை கிடைத்து விட்டதா? இது ஒரு "accident" தானே! (சிரிப்பு)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, சிறு விபத்து பொறுத்தருளக் கேட்டுக்கொள்கிறேன்.

மாட்டுவண்டித் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை

8359 திரு. மெ. ஆண்டி அம்பலம் :
திருமதி ரமணி நல்லதம்பி :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எதிர்பாரா விபத்துகளினால் மரணமடையும் மாட்டு வண்டித் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ. 15,000 அளிக்க வேண்டுமென அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசின் முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9-25 மணி

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாட்டு வண்டிகளிலே இரவு நேரங்களிலே பிரயாணம் செய்கின்ற பொழுது அவர்கள் லாரி அல்லது பஸ் விபத்துக்களில் இறக்கின்றபொழுது, அவர்களுடைய குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆனால், அமைச்சரவர்கள் ஒரே வார்த்தையிலே ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக்கடையில் என்ற அந்த விவசாயிகளை நம்பித்தான் நாமெல்லாம் இருக்கிறோம். அந்த அடிப்படையிலே அமைச்சரவர்கள் கருணை கூர்ந்து மீண்டும் பரிசீலனை செய்து அவர்களுக்கு நல்லதொரு உதவித் தொகை கிடைக்கச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS